சுகாதார அமைச்சு

கல்வி அமைச்சு

# "சுபசுன் தெனுமென் சுவபத் தெயகட்ட"
# சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவு கல்வி அமைச்சுடன் இணைந்து நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான தொற்றா நோய்கள் தொடர்பான வினா விடை போட்டிகள்

ஆரோக்கியமற்ற உணவு, உடல் உழைப்பின்மை, அதிக உடல் பருமன் போன்ற தொற்றா நோய்களின் பரவல் காரணமாக எதிர்காலத்தில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் இருதய நோய்கள், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், புற்றுநோய் மற்றும் பக்கவாதம் போன்ற தொற்றா நோய்கள், அதிகரிக்கக்கூடும் என்று மருத்துவ ஆலோசகர்கள் கருதுகின்றனர். எனவே, இலங்கை பாடசாலை மாணவர்களுக்கிடையில் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகள் மற்றும் தொற்றா நோய்கள் பற்றிய அறிவை மேம்படுத்த சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவு கல்வி அமைச்சுடன் இணைந்து வினா விடை போட்டியொன்றை நடத்த முடிவு செய்துள்ளது.

**போட்டி முறை:**

பின்வரும் நிபந்தனைக்களுக்கு உட்பட்டு, இலங்கையின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி, வலய, மாவட்ட மாகான மட்டங்களில், காலிறுதி, அரையிறுதி, இறுதி என ஆறு சுற்றுக்களாக இந்தப் போட்டி நடத்தப்படும்.

**போட்டி நிபந்தனைகள்:**

1. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள அனைத்து அரசுப் பாடசாலைகளும் இந்தப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம். ஒவ்வொறு பாடசாலையிலிருந்தும் 8 மற்றும் 9 ஆம் வகுப்புகளில் கல்வி கற்கும் ஐந்து மாணவர்களைக் கொண்ட குழுவாக விண்ணப்பிக்கலாம்.

2. ஆரோக்கியமான வாழ்கை முறை மற்றும் தொற்றா நோய்களின் முக்கியத்துவம் பற்றிய அறிவுத்திறன் மட்டுமே பரிசோதிக்கப்படும்.

அதற்கு பின்வரும் பகுதிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

| | |
|---|---|
| நாள்பட்ட தொற்றாத நோய்கள் | இதயம் மற்றும் மூளை தொடர்பான நோய்கள் நாள்பட்ட சுவாச நோய்கள், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் புற்றுநோய்<br>ஆபத்து காரணிகள் - ஆரோக்கியமற்ற உணவு, உடல் உழைப்பின்மை, அதிக உடல் பருமன், புகையிலை மற்றும் மது பயன்பாடு |
| திடீர் தொற்றாத நோய்கள் (Acute NCDs) | விபத்துக்கள் (சாலை விபத்துக்கள் மற்றும் வீட்டு விபத்துக்கள்), விழுதல், நீரில் மூழ்குதல், தீக்காயம், மூச்சுத் திணறல், பாம்பு கடி, விலங்கு கடி, நஞ்சூட்டடல் மற்றும் முதலுதவி |
| வேறு தொற்றாத நோய்கள் | மனநோய், சிறுநீரக நோய்கள் மற்றும் தலசீமியா |

வெற்றியாளர்களுக்கான பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள்:

1. **மண்டல சுற்று:** வெற்றி பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பங்கேற்பு சான்றிதழும் வழங்கப்படும்.

2. **மாவட்ட சுற்று:** மண்டலங்களில் இருந்து அதிக மதிப்பெண்கள் பெறும் 25 மாவட்ட அணிகளுக்கு ஒரு மாணவருக்கு ரூ.2000.00 மதிப்பிலான வவுச்சரும் சான்றிதழும் வழங்கப்படும். பங்கேற்பதற்கான சான்றிதழும் வழங்கப்படும்.

3. **மாகாண சுற்று**: வெற்றி பெறும் 09 அணிகளுக்கு ஒவ்வொரு மாணவருக்கும் தலா ரூ.5000.00 மற்றும் சான்றிதழும் பங்கேற்பதற்கான சான்றிதழும் வழங்கப்படும். வெற்றி பெறும் 09 பாடசாலைக்கும் ரூ. தலா 50,000.00 வழங்கப்படும்.

4. **காலிறுதிச் சுற்று**: வெற்றி பெறும் 03 அணிகளுக்கு ஒவ்வொரு மாணவருக்கும் தலா 10,000.00 ரூபாய் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். பங்கேற்பதற்கான சான்றிதழும் வழங்கப்படும்.

5.**அரையிறுதிச் சுற்று**: வெற்றிபெறும் 02 அணிகள் ஒவ்வொரு மாணவருக்கும் தலா 15,000.00 ரூபாய் மற்றும் சான்றிதழும் வழங்கப்படும். பங்கேற்பதற்கான சான்றிதழும் வழங்கப்படும்.

6.**இறுதிச் சுற்று**: வெற்றி பெறும் அணியின் ஒவ்வொரு மாணவருக்கும் தலா ரூ20,000.00 மற்றும் சான்றிதழும், பாடசாலைக்கும் ரூ.100,000.00 பரிசும் மற்றும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படும். இரண்டாம் இடம் பெறும் அணிக்கு ஒவ்வொரு மாணவருக்கு ரூ. 10,000.00 மற்றும் சான்றிதழ் மற்றும் பாடசாலைக்கும் ரூ. 75,000.00 மற்றும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படும்.

போட்டியில் கலந்து கொள்ள பின்வரும் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து பாடசாளை அதிபர் ஊடாக கீழ் வரும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்ப வேண்டும். அதே வேளை விண்ணப்பத்தை interschoolquizncd@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்ப வேண்டும்.

சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவு கல்வி அமைச்சுடன் இணைந்து நடத்தும் பாடசாலைக்களுக்கு இடையிலான தொற்றா நோய்கள் தொடர்பான வினா விடை போட்டி விண்ணப்பம்.

1. மாகாணம்:
2. மாவட்டம்:
3. வலயம்:
4. பாடசாலையின் பெயர்:

| இல | மாணவரின் முழுலப் பெயர் | ஆண் / பெண் | தரம் | வயது |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உருதிப்படுத்துகிறேன்.

அதிபரின் கையோப்பம்:
பெயர்
அதிகாரபூர்வ முத்திரை:
திகதி:

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**
பணிப்பாளர், தொற்றா நோய்கள் பிரிவு, சுகாதார அமைச்சு, “சுவசிரிபாய”, 385, வண பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.

**விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய இறுதித் திகதி : 20.06.2024**

இந்த போட்டி பற்றிய மேலதிக தகவல்களை 0112669599 அல்லது 0724343270 என்ற தொலைபேசி மூலமாகவோ அல்லது interschoolquizncd@gmail.com மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் தமிழ் மொழியிலும் விபரங்களைக் கோரலாம்.

Dr.சமித்தி சமரகோன்
பணிப்பாளர்
தொற்றா நோய்கள் பிரிவு
சுகாதார அமைச்சு